எம்.சி.ஓ.பி எண்: 2219,2220/2023(Joint Trial) தேதி: 18.03.2025

மசா. : 2

பெயர் : கண்ணன்

த/பெ. : சேகர்

வயது : 25

சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்

முதல் விசாரணை

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 6 முதல் 17 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

காரில் மொத்தம் 6 பேர் பயணம் செய்தோம் என்றால் சரி. நாங்கள் சென்ற கார் மத்தியில் உள்ள தடுப்புச்சுவரில் மோதி விபத்து நடந்தது. வண்டியை ஓட்டியவரின் ஓட்டுநர் உாிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. கார் வெள்ளை போர்ட் கார். விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் கார்த்திக்கொடுத்தார். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் சரிதான். காரில் வந்த அனைவருக்கும் அடிப்பட்டது என்றால் சரி. யார் யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தொியாது. பதிவு சான்று படி அந்த காரில் மொத்தம் டிரைவருடன் சேர்த்து 5 பேர்தான் பயணம் செய்யவேண்டும் என்றால் சரி. கார் மத்திய தடுப்புச்சுவரில் மோதியதாக முதல் தகவல் அறிக்கையில் காணப்படவில்லை என்றாலும் இடது பக்கத்தில் உள்ள பாலத்தில் மோதியதாக காணப்படுகிறது என்றாலும் சரிதான். காரின் உாிமையாளர் எனது நண்பர் என்றால் சரி. ஏதோ அடையாளம் தொியாத வாகனம் மோதி விபத்து நடந்தது என்றாலும் அந்த வாகனத்தை கண்டுபிடிக்கமுடியாத காரணத்தாலும் முதல் எதிர்மனுதாரர் எனது நண்பர் என்பதாலும் முதல் எதிர்மனுதரார் வாகனம் விபத்துக்கு காரணம் என தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை கூறியுள்ள விவரங்களும் என்னுடைய சாட்சியமும் முன்னுக்கு பின் முரணாக உள்ள காணரத்தால்என்னுயை சாட்சி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. தொழில் ◌்வருமானம், வருமான இழப்பு நிறுபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தொடர்சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்கள் அனைத்தும் குணமாகி விட்டது

என்றாலும் எனக்கு வருமான இழப்போ, திறன் இழப்போ ஏற்படவில்லை என்றாலும் அதிக இழப்பீடு பெறுவதற்காக காயத்தின் தன்மையை மிகைப்படுத்திக்கூறுகிறேன் என்றால் சரியல்ல. காப்பீடு விதிமுறைகளை மீறி அதிக நபர்கள் பயணம் செய்துள்ள காணரத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

X

மறுவிசாரணை இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.